# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. O.S.No.75/2024.

Prosecution witness for P.W. 2.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. மகபூப் பாட்ஷா. | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.08.2026.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது தூத்துக்குடியில் குடியிருந்து தீயணைப்பு துறை அதிகாரியாக பணியில் இருந்து வருகிறேன். சாட்சி சொல்ல அழைப்பாணை வந்தது. வா.சா.ஆ 1 ல் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். 02.12.2023 அன்று பிரதிவாதி வாதிகளிடம் ரூபாய் 9 லட்சம் கடனாக பெற்றுக் கொண்டு பிரதிவாதி வா.சா.ஆ 1 கடன் உறுதி சீட்டை எழுதிக் கொடுத்தார். மாதம் ஒரு சதவீத வட்டி கொடுப்பதாக அதன்படி ஒப்புக் கொண்டார். 1 ம் வாதி என் குடும்ப நண்பர் என்பதால் மேற்படி தேதியில் பிரதிவாதிக்கு கடன் கொடுப்பதற்காக என்னை அழைத்தார். நான் போனேன். என் முன்பாகத்தான் வாதி பணம் கொடுத்தார். புரோ நோட்டில் பிரதிவாதி கையொப்பமிட்டார். பிறகு அருண்வேல் என்பவர் முதல் சாட்சி கையொப்பமிட்டார். புரோ நோட்டை ரூபாய் 26 லட்சத்திற்கு பிரதிவாதி எழுதிக் கொடுத்தார். அதற்கு முன்பாக வாதிகளுக்கும், பிரதிவாதிக்கும் வங்கி மூலமாக பண பரிவர்த்தனை நடந்தது அதற்காக ரூபாய் 26 லட்சத்திற்கு பிரதிவாதி புரோ நோட்டு எழுதிக் கொடுத்தார்.

MUNISWAMI THANDAVAN
Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.08.07 18:27:12 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
தூத்துக்குடி.